# மதுரையில் எஸ்டிபிஐ ஆர்ப்பாட்டம்

மதுரை, டிச. 7: பாபர் மசூதி இடிப்பு தினத்தை முன்னிட்டு, எஸ்டிபிஐ-தமுமுக சார்பில் மதுரை தெற்குவாசல் சின்னக்கடை வீதியில் ஆர்ப்பாட்டம் நடந்தது. எஸ்டிபிஐ மாநில செயற்குழு உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தலைமை வகித்தார். தெற்கு மாவட்டத்தலைவர் சீமான் சிக்கந்தர் வரவேற்றார்.

வடக்கு மாவட்ட துணைத்தலைவர் ஜாபர் சுல்தான் முன்னிலை வகித்தார். எஸ்டிபிஐ மாநில பொதுச்செயலாளர் நிஜாம் முகைதீன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில துணை பொதுச்செயலாளர் கனியமுதன், **மக்கள் கண்காணிப்பகம் நிறுவனர் வழக்கறிஞர் ஹென்றி டிபேன்** உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர். பெண்கள் உள்பட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். தெற்கு மாவட்ட பொதுச்செயலாளர் சாகுல்ஹமீது நன்றி கூறினார்.

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில், கிரைம் பிராஞ்சில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. தெற்கு மாவட்டத்தலைவர் ஷேக் இப்ராகிம் தலைமை வகித்தார். வடக்கு மாவட்டத்தலைவர் சீனி அகமது வரவேற்றார். மனிதநேய மக்கள் கட்சி மாநில பொருளாளர் கோவை இ.உமர், தமிழ்ப்புலிகள் கட்சி தலைவர் நாகை. திருவள்ளுவன் கண்டன உரையாற்றினார்.

துணைமேயர் நாகராஜன், மதிமுக தொழிற்சங்க மாநில இணை பொதுச்செயலளர் மகபூப்ஜான், தமிழ்புலிகள் நிர்வாகி பேரறிவாளன், தமுமுக நிர்வாகி நஜ்மா பேகம், மாவட்ட செயலாளர் ஆம்புலன்ஸ் சேக் மற்றும் பெண்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர்.



▶ பாபர் மசூதி இடிப்பு தினத்தை முன்னிட்டு, மதுரையில் தமுமுகவினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.